ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாதா$_2$ர்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேதா$_3$ந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸதா$_3$ ஹ்ரு'தி$_3$ ॥

நம்மாழ்வார் அருளிச்செய்த

# ॥ வேய் மருதோள் ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ‖ வேய் மருதோள் ‖

ஆநிரை மேய்க்கச் சென்றால் பிரிவாற்றி இரோம் என்று போக்கைத் தவிர்க்குமாறு ஆய்ச்சியர் கண்ணனை வேண்டுதல்

‡ வேய் மரு தோள் இணை மெலியும் ஆலோ!⋆
    மெலிவும் என் தனிமையும் யாதும் நோக்கா⋆
காமரு குயில்களும் கூவும் ஆலோ!⋆
    கண மயில் அவை கலந்தாலும் ஆலோ⋆
ஆமருவின நிரை மேய்க்க நீ போக்கு⋆
    ஒரு பகல் ஆயிரம் ஊழியாலோ⋆
தாமரைக் கண்கள் கொண்டீர்தியாலோ!⋆
    தகவிலை தகவிலையே நீ கண்ணா! (1)

தகவிலை தகவிலையே நீ கண்ணா!⋆
    தட முலை புணர்தொறும் புணர்ச்சிக்காராச்⋆
சுகவெள்ளம் விசும்பிறந்தறிவை மூழ்க்கச்
    சூழ்ந்து⋆ அது கனவென நீங்கி ஆங்கே⋆
அகவுயிர் அகம் அகந்தோறும் உள் புக்கு⋆
    ஆவியின் பரம் அல்ல வேட்கை அந்தோ⋆
மிக மிக இனி உன்னைப் பிரிவையாமால்⋆
    வீவன் நின் பசுநிரை மேய்க்கப் போக்கே (2)

வீவன்நின் பசு நிரை மேய்க்கப் போக்கு⋆
    வெவ்வுயிர் கொண்டெனதாவி வேமால்⋆
யாவரும் துணையில்லை யான் இருந்து⋆ உன்
    அஞ்சன மேனியை ஆட்டம் காணேன்⋆
போவதன்றொறு பகல் நீயகன்றால்⋆
    பொரு கயற் கண்ணிணை நீரும் நில்லா⋆
சாவதிவ்வாய்க்குலத் தாய்ச்சியோமாய்ப்
    பிறந்த⋆ இத்தொழுத்தையோம் தனிமை தானே (3)

www.dravidaveda.com

தொழுத்தையோம் தனிமையும் துணை பிரிந்தார்
துயரமும்⋆ நினைகிலை கோவிந்தா⋆ நின்
தொழுத்தனிற் பசுக்களையே விரும்பித்⋆
துறந்தெம்மையிட்டவை மேய்க்கப் போதி⋆
பழுத்த நல்லமுதின் இன்சாற்று வெள்ளம்⋆
பாவியேன் மனம் அகந்தோறும் உள்புக்-
கழுத்த⋆ நின் செங்கனி வாயின் கள்வப்
பணிமொழி⋆ நினைதொறும் ஆவி வேமால் (4)

பணிமொழி நினைதொறும் ஆவி வேமால்⋆
பகல் நிரை மேய்க்கிய போய கண்ணா!⋆
பிணியவிழ் மல்லிகை வாடை தூவப்⋆
பெரு மத மாலையும் வந்தின்றாலோ!⋆
மணி மிகு மார்பினில் முல்லைப் போது⋆ என்
வன முலை கமழ்வித்துன் வாய் அமுதம் தந்து⋆
அணி மிகு தாமரைக் கையை அந்தோ!⋆
அடிச்சியோம் தலைமிசை நீ அணியாய் (5)

அடிச்சியோம் தலைமிசை நீ அணியாய்⋆
ஆழியங்கண்ணா! உன் கோலப் பாதம்⋆
பிடித்தது நடுவுனக்கரிவையரும்
பலர்⋆ அதுநிற்க எம் பெண்மை ஆற்றோம்⋆
வடித்தடம் கண்ணிணை நீரும் நில்லா⋆
மனமும் நில்லா எமக்கது தந்நாலே⋆
வெடிப்பு நின் பசு நிரை மேய்க்கப் போக்கு⋆
வேம் எமதுயிர் அழல் மெழுகில் உக்கே (6)

வேம் எமதுயிர் அழல் மெழுகில் உக்கு⋆
வெள் வளை மேகலை கழன்று வீழ⋆
தூமலர்க் கண்ணிணை முத்தம் சோரத்⋆
துணை முலை பயந்தென தோள்கள் வாட⋆
மாமணி வண்ணா! உன் செங்கமல
வண்ண⋆ மென்மலர் அடி நோவ நீ போய்⋆

www.prapatti.com

ஆமகிழ்ந்துகந்தவை மேய்க்கின்றுன்னோடு⋆
அசுரர்கள் தலைப்பெய்யில் எவன்கொல் ஆங்கே (7)

அசுரர்கள் தலைப்பெய்யில் எவன்கொல் ஆங்கென்று⋆
ஆழும் என்னார் உயிர் ஆன் பின் போகேல்⋆
கசிகையும் வேட்கையும் உள்கலந்து⋆
கலவியும் நலியும் எங்கை கழியேல்⋆
வசிசெயுன் தாமரைக் கண்ணும் வாயும்⋆
கைகளும் பீதக உடையும் காட்டி⋆
ஒசிசெய் நுண் இடை இளவாய்ச்சியர்⋆ நீ
உகக்கும் நல்லவரொடும் உழிதராயே (8)

உகக்கு நல்லவரொடும் உழிதந்து⋆ உந்தன்
திருவுள்ளம் இடர் கெடும்தோறும்⋆ நாங்கள்
வியக்க இன்புறுதும் எம் பெண்மை ஆற்றோம்⋆
எம் பெருமான்! பசு மேய்க்கப் போகேல்⋆
மிகப் பல அசுரர்கள் வேண்டுருவம் கொண்டு⋆
நின்றுழிதருவர் கஞ்சன் ஏவ⋆
அகப்படில் அவரொடும் நின்னொடாங்கே⋆
அவத்தங்கள் விளையும் என் சொற் கொள் அந்தோ! (9)

அவத்தங்கள் விளையும் என் சொற் கொள் அந்தோ!⋆
அசுரர்கள் வன் கையர் கஞ்சன் ஏவ⋆
தவத்தவர் மறுக நின்றுழிதருவர்⋆
தனிமையும் பெரிதுனக்கிராமனையும்
உவர்த்தலை⋆ உடன் திரிகிலையும் என்றென்று⋆
ஊடுற என்னுடை ஆவி வேமால்⋆
திவத்திலும் பசு நிரை மேய்ப்புவத்தி⋆
செங்கனி வாய் எங்கள் ஆயர் தேவே! (10)

‡ செங்கனி வாய் எங்கள் ஆயர் தேவு⋆ அத்
திருவடி திருவடிமேல்⋆ பொருநல்
சங்கணி துறைவன் வண் தென் குருகூர்⋆
வண் சடகோபன் சொல்லாயிரத்துள்⋆

மங்கையர் ஆய்ச்சியர் ஆய்ந்த மாலை⋆
அவனொடும் பிரிவதற்கிரங்கி⋆ தையல்
அங்கவன் பசு நிரை மேய்ப் பொழிப்பான்
உரைத்தன⋆ இவையும் பத்தவற்றின் சார்வே (11)

॥ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ॥

www.prapatti.com